139

170

தமிழ் நாடு அரசு

## சுருக்கம்

கல்வி தகுதி – பொதுப் பணிகளில் வேலை வாய்ப்பு பெற மத்திய அரசால்
அவ்வப்போது வெளியிடப்படும் முப்படையினருக்கான தொழிற்கல்வி தகுதியை
( Military Trade ) மாநிலங்களிலுள்ள படைத் துறை சாராத
தொழிற்கல்வித் தகுதிகளுக்கு ( Civil Trade ) இணையாக கருதி
அங்கீகரித்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - -

பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (ஆர்) துறை.

அ.ஆ. நிலை எண் 106 — நாள்: 11.6.1999

பிரமாதி, வைகாசி, 28
திருவள்ளுவர் ஆண்டு 2030.

படிக்கப்பட்டது:

1. அரசாணை நிலை எண். 441, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (ஆர்) துறை, நாள் 20.12.93.
2. முன்னாள் படைவீரர்கள் நலத்துறையின் கூடுதல் இயக்குநரது கடித எண். 9572/97/சி.1, நாள் 9.12.97.
3. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் செயலரது கடித எண். 3196/ஆர்.என்.டி.–ஏ5/98, நாள் 17.9.98.

3169

N.P

Pb 3-5-4 ... C.No.3169/Rrp.F1/98 action taken separately

ஆணை:

முன்னாள் படைவீரர்கள் நலத்துறையின் கூடுதல் இயக்குநர் அவர்கள்,
மத்திய அரசால் வழங்கப்படும் முப்படையினருக்கான தொழிற்கல்வித் தகுதியை
( Military Trade ) மாநிலங்களிலுள்ள படைத்துறை சாராத
தொழிற்கல்வித் தகுதிகளுக்கு ( Civil Trade ) இணையாகக் கருதி
அவ்வப்போது ஆணைகள் வெளியிடுகின்றன என்றும், அவ்வாறு ஆணைகள் வெளியிடு–
முன்னர், தொடர்புடைய அமைச்சகங்கள் / இராணுவம் / கப்பற்படை /
விமானப்படை ஆகியவற்றால் அளிக்கப்படும் தொழிற்கல்வித் தகுதிகளுக்கான பாட
திட்டங்கள் மற்றும் முப்படையில் பணியாற்றுபவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியின்
தரம் ஆகியவற்றின் விபரங்களைப் பெற்றும், மனிதவள மேம்பாட்டுத் துறையின்
பணியாளர் மற்றும் பயிற்சித் துறை இயக்குநரின் இசைவினையும் பெற்ற பின்னரே
ஆணைகள் மத்திய அரசால் வெளியிடப்படுகின்றன. மேலும், இப்பொருள்
தொடர்பாக மாநில அரசை அணுகும்போதெல்லாம், மத்திய அரசால்
அங்கீகரிக்கப்பட்ட முப்படையினருக்கான தொழிற்கல்வியின் பாட திட்டங்களின்
விபரங்களைக் கேட்பதாகவும், அதை பாதுகாப்புத் துறை சார்ந்த தொழிற்–
கல்வி நிறுவனங்களில் இருந்து பெறுவதில் காலதாமதங்கள் நிகழ்வதாகவும்,
முன்னாள் படைவீரர் நலத்துறையின் கூடுதல் இயக்குநர் அவர்கள்
தெரிவித்துள்ளார். எனவே, மத்திய அரசால் வெளியிடப்படும் முப்படையினருக்கான
தொழிற்கல்வித் தகுதியை ( Military Trade ) மாநிலங்களிலுள்ள
படைத்துறை சாராத தொழிற்கல்வி தகுதிகளுக்கு ( Civil Trade )
இணையாகக் கருதி மத்திய அரசால் வெளியிடப்படும் ஆணைகளின் அடிப்படையில்
நானாகவே இம்மாநிலத்திலும் பொருந்தும் வகையில் அங்கீகாரம் வழங்க
ஆணை வெளியிடுமாறு, முன்னாள் படைவீரர் நலத்துறை கூடுதல் இயக்குநர்
அவர்கள் அரசைக் கேட்டுள்ளார்.

..2..

2. முன்னாள் படைவீரர் நலத்துறை கூடுதல் இயக்குநரின் கோரிக்கை, அரசாணை நிலை எண்.441, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (ஆர்) துறை, நாள் 20.12.93-ன் படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவரைத் தலைமையாகக் கொண்ட குழுவின் முன்னர் பரிந்துரைக்காக வைக்கப்பட்டது.

3. 21.8.98 அன்று நடந்த குழுக் கூட்டத்தில் மேற்காணும் பொருள் குறித்து விவாதிக்கப்பட்டு, முன்னாள் படைவீரர் நலத்துறையின் கூடுதல் இயக்குநரது கோரிக்கையை ஏற்கலாம் என குழுவும் பரிந்துரைத்துள்ளது.

4. குழுவின் பரிந்துரையை அரசு தீவிர பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ள முடிவெடுத்துள்ளது. அவ்வாறே, முப்படையினருக்கான தொழிற்கல்வித் தகுதியை ( Military Trade ) மாநிலங்களிலுள்ள படைத்துறை சாராத தொழிற்கல்வித் தகுதிக்கு ( Civil Trade ) இணையாகக் கருதி, மத்திய அரசால் வெளியிடப்படும் ஆணைகளின் அடிப்படையில் தானாகவே ( Automatic Acceptance ) இம்மாநிலத்திலும் பொருந்தும்வகையில், வேலைவாய்ப்பினை பெறும்பொருட்டு, அங்கீகரித்து ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

உஷா பாலகிருஷ்ணன்.
அரசுச் செயலர்.

பெறுநர்

அனைத்து அரசுச் செயலர்கள், சென்னை-9.

அனைத்துத் துறை தலைமை அலுவலர்கள்.

செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2.

கூடுதல் இயக்குநர், முன்னாள் படைவீரர் நலத்துறை இயக்ககம், 22, கன்னப்பர் திடல், சென்னை-3.

நகல்:-

அனைத்துத் தலைமைச் செயலக துறைகள், சென்னை-9.
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் அனைத்துப் பிரிவுகள், சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

[signature]
பிரிவு அலுவலர்.